[1980 ஜூலை 4

ஆ. பெரியார் அணையைப் பலப்படுத்தல்.

* திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "பெரியார் அணையை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதால் நீர் பிடிப்பு மட்டம் பாதிக்கப்படும் என பெரியகுளம், உத்தமபாளையம், கம்பம் பகுதி விவசாயிகளிடையே நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, கேரள மாநில எல்லைக்குள் இருக்கும் பெரியாறு அணை தமிழ்நாட்டுக்கு சொந்தமானது. அணை அமைந்திருக்கும் இடத்தை கேரள அரசிடமிருந்து குத்தகை முறையில் தமிழ்நாடு எடுத்துள்ளது. சென்ற ஆண்டு கேரள பத்திரிகைகளில் பெரியாறு அணை அபாயமான நிலையில் உள்ளது என வெளியான செய்திகளின்பேரில் இவ்வரசு மத்திய நீர்வளக்குழுவின் Water Commtssion) தலைவர் அவர்களை அணையைப் பார்வையிட்டு அவரது ஆலோசனையை தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க, மத்திய நீர்வளக்குழுவின் தலைவர் அவர்கள், தமிழக மற்றும் கேரள அதிகாரி களுடன் அணையைப் பார்வையிட்டார். அணையைப் பலப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துபேசி முடிவுகள் எடுக்கப் பட்டன. இம்முடிவுகளில் ஒன்று அணையைப் பலப்படுத்தும் வேலைகள் முடிவுறும்வரை, அணையின் பாதுகாப்பை கருதி, அதன் நீர்மட்டத்தை வழக்கமாக உள்ள பிளஸ் 145 அடிக்கு பதிலாக பிளஸ் 136 அடியில் வைத்திருக்க வேண்டும் என்பது. இதன்படி, அணையை பலப்படுத்தும் பணிகள் முடி வடையும் வரையில் அணையின் நீர் மட்டத்தை பிளஸ் 136 அடியில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அணையைப் பலப்படுத்துவதற் கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இப்பணிகள் 1981 ஆம் ஆண்டு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. எனவே, தற்போதைய பாசன காலத்தில் அணையின் நீர்மட்டத்தை பிளஸ் 136 அடியில் வைத்திருக்கப்பட வேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. அணைக்கு வரும் தண்ணீர் வழக்கம்போல் இருப்பின், நீர் மட்டம் 136 அடிக்கு மேல் போக விடாமல், கிடைக்கும் தண்ணீர் முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியும். இதற்காக, இவ்வணைக்கான விதிகளைத் தளர்த்தி இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, மின் உற்பத்திக்குத் தேவை யான அளவைவிட தேவைப்படும்போது அதிகமான தண்ணீரை மாற்று சுரங்கப்பாதை மூலம் எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய ஏற்பாடுகளால்

1980 ஜூலை 4] [திரு. கே. இராஜா முகமது]

பெரியாறு அணையில் கிடைக்கும் தண்ணீரை, எந்த அளவு முழுமையாக பயன் படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அணையின் கட்டுமானப் பணிகளை கவனிக்கும் மேற்பார்வைப் பொறியாளரிடம் அணையில் தண்ணீரை முறைப்படுத்தும் பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3. அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் வைத்திருப்பதால் கிடைக்கும் உபரி தண்ணீரை சீரிய முறையில் பயன்படுத்துவதற்கு, அரசு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கைகளின் விளைவாக பாசனத்திற்குக் கிடைக்கும் தண்ணீரை முழுமையாக பயன்படுத்துவதில் எந்த விதமான சிரமும் இருக்காது.

4. அணையை பலப்படுத்தும் பணிகள் முடிந்தவுடன் அணையின் நீர் மட்டத்தை 145-க்கு உயர்த்திக்கொள்வது சாத்யமாகலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, இந்த கட்டுமானப் பணிகளின் வேலை எப்பொழுது துவக்கப்பட்டது? எந்த ஒப்பந்தக்காரர்கள் என்று முடிவு செய்யப்பட்டு வேலை விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணி களிலே, கேபிள் பவுண்டேஷன் என்று சொல்லப்படுகிற புதை கம்பி நங்கூரங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா? கட்மோன பணி முழுவதும் முடிந்த வுடன் முழு உயரமான 152 அடிக்கும் மேற்பிடிப்பு சுவர் எழுப்பப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மத்திய நீர் வளக் குழுவின் தலைமையில் கேரள அரசோடு 25—11—1979 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதத்திற்குப் பிறகு, அணையை பலப்படுத்தும் பணியை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, புதை கம்பி நங்கூரங்கள் என்று சொல்லப்படுகிற கேபிள் பவுண்டேஷன் என்ற அந்தப் பணி மிக முக்கியமானது. இத்தகைய பணிகளை 'சன் இந்தியா' என்று சொல்லக்கூடிய கம்பெனி அனைத்து இந்தியாவிலும் மேற்கொண்டு வருகிறது. நிறுவனம் கொடுத்த விவரங்களை பொதுப்பணித்துறைச் செயலாளர், நீர்ப்பான தலைமைப் பொறியாளர், மத்திய நீர் வளக் குழுவின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் ஆராய்ந்த பிறகு இந்தப் பணியை அந்த நிறுவனத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பணி 81 ஆம் ஆண்டிலே முடிவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.